Registered as a Newspaper பக்கங்கள் 4 விலை ரூபா 5-00

நூலகம் மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

The Eelanaatham மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 27 (10.5.94) செவ்வாய்க்கிழமை ஓசை 81

## வடபகுதி தபால்களை உடைக்க அவசரகால விதியின்கீழ் சட்டம்

வடபகுதிக்கு எடுத்துச் செல்லப்படும் தபால்கள் பிரிக்கப்பட்டு அவற்றுக்குள் காணப்படும் பண நோட்டுக்கள் கைப்பற்றப்பட வேண்டும் என்று அவசரகால சட்டத்தின் பிரகாரம் பாராளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்டு அரசாங்கத்தினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத் தகவலை வடமாகாண தபால்மா அதிபர் எஸ் எம். சேதுகாவலர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: கொழும்பு துறைமுகம் ஊடாக கப்பலில் வடபகுதிக்கு எடுத்து வரப்படும் தபால்கள் குறிப்பாக வெளிநாட்டுத்தபால்கள் கடற்படையினரால் பிரிக்கப்பட்டு சோதனை செய்யப்படவேண்டும் என்றும் (4ஆம் பக்கம் பார்க்க)

# பொதுத்தேர்தலுக்கு முன் ஜனாதிபதித் தேர்தல்!

## ஐ. தே. க. செயற்குழுவின் தீர்மானம் ஜனாதிபதிவிஜேதுங்காவால்நிராகரிப்பு

(கொழும்பு)

**பொதுத் தேர்தலுக்கு முன்பாக குறிப்பிட்ட ஒரு தினத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது என சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா முடிவு செய்துள்ளதாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது,**

இது தொடர்பாக சண்டே ரைம்ஸ் வெளியிட்டுள்ள செய்தியில், நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிச் செயற்குழுவும், அரசியல் சட்ட விவகார அமைச்சும் வழங்கிய ஆலோசனைகளை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா நிராகரித்திருப்பதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. பாராளுமன்றத் தேர்தலுக்கு முதல் உரிய காலத்தில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா ஜனாதிபதி தேர்தலை நடத்துவதென முடிவு செய்திருப்பதாக அதே வட்டாரத்தினர் தெரிவிக்கின்றனர்.

அரசியல் சட்ட விவகார அமைச்சு ஜனாதிபதி தேர்தலும், பாராளுமன்றத் தேர்தலும் ஒரே நாளில் நடத்தப்பட வேண்டும் என்று ஆலோசனை வழங்கியது. ஐ.தே.க. செயற்குழு ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்றத் தேர்தலை வைக்குமபடி டி.பி விஜேதுங்காவைக் கேட்டிருந்தது. ஜனாதிபதி நீண்ட நேரப் பேச்சுவார்த்தையின் பின் இரு தரப்பினரதும் ஆலோசனைகளையும் ஏற்க மறுத்துள்ளார்.

அனைத்து மாகாணங்களிலும் தேர்தல் ஒழுங்குகளை மேற்கொள்ள ஏழு அமைச்சர்களைக் கொண்ட குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

இந்தக் குழுவில் ஏ-சி எஸ்- ஹமீட் (மத்திய மாகாணம்), சந்திர பண்டாரா (வட மத்திய மாகாணம்), (4ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணை வீச்சு

(குருநகர்)

மண்டைதீவுப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவம் நேற்று பிற்பகல் 2 மணியளவில் யாழ் கரையோரப் பகுதியை நோக்கி எறிகணைத் தாக்குதலை நடத்தியது. (21)

## மத்திய மாகாண சபையில் பதவி மாற்றம் நிகழும்?

(கொழும்பு)

மத்திய மாகாணசபையின் முதலமைச்சர் பதவியில் மாற்றம் நிகழலாம் என எதிர்பார்க்கப்படுவதாக தெரியவருகிறது.

தற்போது முதலமைச்சராகப் பதவி வகிக்கும் டபிள்யூ பி.பி திசாநாயக்க சப்ரகமுவ மாகாண ஆளுநராக நியமிக்கப்படலாம் எனவும் மத்திய மாகாண முதல்வராக தற்போது மத்திய மாகாண அமைச்சராக இருக்கும் லக்கி ஜயவர்த்தனா அல்லது காமினி ராஜபக்ஷா வரக்கூடும் எனவும் கூறப்படுகின்றது சப்ரகமுவ மாகாண ஆளுநர் நொயல் விமலசேன அண்மையில் காலமானார் என்பது தெரிந்ததே.

## இலங்கை வங்கி தலைவரை பதவி விலக டி. பி. பணிப்பு

(கொழும்பு)

இலங்கை வங்கியினதும் சகல அபிவிருத்தி அதிகாரசபைகளினதும் தலைவர்களைப் பதவி விலகுமாறு ஜனாதிபதி டி.பி விஜேதுங்கா கேட்டுள்ளார்.

மேலும் அரச பணியில் சேவையாற்றும் சகல 60 வயதுக்கு மேற்பட்டவர்களையும் பதவியிலிருந்து நீக்கி ஏற்கனவே சேவையிலுள்ள இளைஞர்களை அவ்விடங்களுக்கு நியமிக்கவும் டி, பி. விஜேதுங்கா தீர்மானித்துள்ளார்.

ஏரிக்கரை பத்திரிகைத் தலைமைத்துவத்தில் மேற்கொண்டுள்ள மாற்றத்தைத் தொடர்ந்து கூட்டுத்தாபனங்கள், வங்கிகள் சகல அபிவிருத்தி அதிகாரசபைகள் ஆகியவற்றின் தலைமைத்துவத்தில் மாற்றங்களைக் கொண்டுவர ஜனாதிபதி டி பி.விஜேதுங்கா தீர்மானித்துள்ளதாகவும் அதன் ஒரு அங்கமாகவே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கொள்ளை சந்தேகநபர் மீது நீதிமன்றப் பிடியாணை

(வடமராட்சி)

பல கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட சந்தேக நபர் மீது பருத்தித்துறை நீதிமன்று பகிரங்க பிடியாணை பிறப்பித்துள்ளது.

கரவெட்டி யாக்கருவைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை- புவிலோகநாதன் என்பவர் மீது இப்பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (யோ)

## தமிழ்மொழி, கலைத்திறன் போட்டி விதிகளில் மாற்றம்

இவ்வாண்டு யாழ்ப்பாணம் வலயம் ஒன்று, வலயம் இரண்டினைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கான தமிழ் மொழி கலைத்திறன் செயற்பாடுகள் பயில்வு நிலையில் பெரும்பாலான மாணவர்கள் பங்கேற்றத் தக்க வகையில் பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறுவர் நாடகம், நாட்டார் கருவி இசை, திருக்குறள் மையமான செயற்பாடுகள், புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட புதிய அம்சங்களாகும். இந் நிகழ்ச்சிகளுக்கான தயாரிப்பில் ஈடுபடும் ஆசிரியர்களுக்குக் கோட்ட ரீதியில் விளக்கப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் பரந்த ஈடுபாட்டிற்கு ஊக்கம் தரும் வகையில் முதலாம், இரண்டாம், மூன்றாம். நான்காம் பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிலும் [4ஆம் பக்கம் பார்க்க]

இடம்பெயர்ந்தோருக்கான

## உணவு முத்திரை இன்மை; விநியோகம் தாமதம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து வந்த 'கோமாரி' கப்பலில் மண்ணெண்ணெய் மற்றும் மாணவர் மதியஉணவு முத்திரைகள்

இதனால் ஏப்ரல் மாதத்திற்குரிய இடம் பெயர்ந்தோருக்கான இலவச உலர் உணவு விநியோகம் தாமதமடைந்துள்ளது.

பித்துள்ளது. க்கப்பட்டுள்ளது. (யோ)

## றோகண வசித்த வீட்டை வாங்குவார் எவருமில்லை

ஜே. வி. பியின் முன்னாள் தலைவர் றோகண விஜயவீர இறுதியாக வசித்த நவீன வீட்டினை விற்பனை செய்வதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் அதனை வாங்குவதற்கு இதுவரை எவரும் முன்வரவில்லை என தெரிய வருகிறது.

றோகண விஜயவீர வசித்து வந்த மேற்படி வீடு 65 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. அங்கு மேற்கொள்ளப்பட்டு வந்த விளை பொருள்கள் யாவும் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன இத்தோட்டம் கம்பளைக்கும் நாவலப்பிட்டிக்கும் இடையில் உள்ளது. இதிலிருந்தே றோகண விஜயவீர தனது இயக்க நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

இவரது இந்த வீடு மின்சாரம், தளபாடம் மற்றும் நவீன வசதிகளைக் கொண்டதாக இருந்தது.

இவரின் கொலையின் பின்னர், இவ் வீட்டை இராணுவம் காவல் காத்து வந்தது இப்போது பொலிசாரே இவ் வீட்டில் காவலிருக்கின்றனர் ஆனால் இவ் வீட்டிலிருந்த எல்லாப் பொருள்களும் காணாமல் போய்விட்டன.

## 'பிளம்பயனி'ல் தபால்; கடற்படை முட்டுக்கட்டை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சேவையில் ஈடுபடுத்தியுள்ள 'பிளம் பயன்' கப்பலில் கடிதப் பொதிகள் ஏற்றி வருவதற்கு கடற்படை முட்டுக்கட்டை போடுகின்றது. என வடமாகாண தபால் மா அதிபர் எஸ். எம். சேதுகாவலர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்

வெளிநாட்டு, உள்நாட்டு தபால் பொதிகள் திருகோணமலை வரையும் தரை மார்க்கமாக எடுத்து வரப்பட்டு அங்கிருந்து சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் சேவையில் ஈடுபடுத்தியுள்ள 'பிளம் பயன்' கப்பலில் ஏற்றி வருவதற்கு கடற்படை தொடர்ந்து முட்டுக்கட்டை போடுகின்றது.

திருகோணமலை தபாலகத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இக் கடிதப் பொதிகளைப் பொறுப்பெடுத்த பின்னர் இவற்றை சோதனைக்குட்படுத்துவதில் பல சிரமங்கள் உள்ளதாலேயே கடற்படை இவ்வாறு முட்டுக்கட்டை போட்டுள்ளது.

இதன் காரணமாகவே இக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன்துறையில் தங்கப்பதக்கம் பறிமுதல்

(கொழும்பு)

திருகோணமலையிலிருந்து நரோமா கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு வந்த வங்கி ஊழியர் ஒருவரிடம் இருந்த தங்கப் பதக்கம் மற்றும் ண்டேஸ் சொக்கலேட்டுக்கள் என்பவை காங்கேசன்துறையில் வைத்து கடற்படையினரால் பறித்தெடுக்கப்பட்டுள்ளன.

காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் இவருக்கு வழங்கப்பட்ட தங்கப் பதக்கமே படையினரால் பறிமுதல் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. இது குறித்து சம்பந்தப்பட்ட நபர் யாழ், அரசாங்க அதிபரிடம் எழுத்து மூலம் புகார் செய்துள்ளார்.

## காமினியை பா. உ. ஆக்குவதில் ஐ. தே. க. தலைமை விடாப்பிடி

முன்னாள் அமைச்சர் காமினி திசநாயக்கவை பாராளுமன்ற உறுப்பினராக ஆக்கியே தீருவதென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பீடம் தீர்மானித்துள்ளது.

இதற்கு வழிவிட ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்கள் மறுத்து நீதி மன்றம் செல்ல தீர்மானித்துள்ளனர்.

எனினும் இம் மாத இறுதிக்குள் காமினி திசநாயக்காவை பாராளுமன்ற உறுப்பினராக ஆக்குவது என கட்சித் தலைமைப்பீடம் முடிவு செய்துள்ளது.

## தென்மாகாண தேர்தல் வன்முறை; விசாரணைகளை நிறுத்த பணிப்பு

தென்மாகாணசபைத் தேர்தலைத் தொடர்ந்து இடம்பெற்ற கொலைகள் மற்றும் ஆட் கடத்தல் தொடர்பாக நடைபெற்றுவந்த விசாரணைகளை உடனடியாக நிறுத்துவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன,

அரசியல்வாதிகளின் தலையீடே மேற்படி விசாரணைகளை நிறுத்துவதற்குக் காரணமாக இருப்பதாகவும் எனவே இம்மாகாணத்தில் இடம்பெற்ற விரும்பத்தகாத சம்பவங்களுக்கு அரசியல்வாதிகள் பின்னணியில் இயங்குவதாகவும் இது சட்டம் ஒழுங்கு நடவடிக்கைக்கு அச்சுறுத்தலாக அமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரச்சினைக்கு தீர்வு கிட்டாமைக்கு அரசாங்கம் மட்டும் காரணமல்ல

- அமைச்சர் டி. பி. தேவராஜ்

இனப் பிரச்சினைக்கு தீர்வு காணத்தவறியதற்காக அரசின் மீது மட்டும் குற்றம் கூற முடியாது எதிர்க்கட்சிகளும் இதற்கான பொறுப்பை ஏற்கவேண்டும் இவ்வாறு அமைச்சர் டி. பி தேவராஜ் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சியினால் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண அனைவரது ஒத்துழைப்பும் அவசியம் அரசின் மீது மட்டும் இதற்கான பொறுப்பைச் சுமத்த முடியாது இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு தவறியமை தொடர்பாக எதிர்க்கட்சிகள் மீதும் குற்றம் சுமத்தப்பட முடியும் ஏனெனில் தெரிவுக்குழுவிற்கு அவர்கள் போதிய ஒத்துழைப்பு தரவில்லை என்றும் தெரிவித்தார்.

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்-

## ஐ. தே. க. தலைவராக மீண்டும் பண்டிதரெட்ணா

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தலைவர் என். ஜி. பி. பண்டிதரெட்ணா மீண்டும் தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதியின் கட்சிப் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் இப்போதைய தலைவர் எம். சி. எம் கலீல் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து விலகவுள்ளார்; அந்த இடத்துக்கே பண்டிதரெட்ணா நியமிக்கப்படவுள்ளார்.

வர் மதியஉணவு முத்திரைகள் எடுத்துவரப்பட்ட போதும் இடம்பெயர்ந்தவர்களுக்கான இலவச உலர் உணவு முத்திரைகள் எடுத்துவரப்படவில்லை என யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

துள்ளது.

இதே வேளை மேற்படி மத்தத்திற்கான உலர் உணவு விநியோகத்தை முத்திரை இன்றி வழங்குவதற்கான அனுமதியை தற்சமயம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## சகல மாணவருக்கும் உணவு முத்திரை

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு முத்திரை வழங்கும் திட்டத்தை சகல பாடசாலை மாணவர்களும் பயன்பெறும் வகையில் அமுல் நடத்தும்படி ஜனதிபதி டி. பி. விஜேதுங்க கல்வி அமைச்சிற்கு தற்போது பணிப்புரை விடுத்து இருக்கிறார்.

மாணவர்களுக்கான உணவு முத்திரை தற்போது ஜனசவிய உதவி பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும், உணவு முத்திரை கோரும் மாணவர்களுக்கும் மட்டுமே வழங்கப்பட்டு வருவது குறிபிடத்தக்கது இதனால் சுமார் 18 லட்சம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர் நிவாரணம் கொடுப்பனவில் இழுபறி

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான நிவாரணக்கொடுப்பனவு விடயத்தில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளதாக அறிய வருகிறது.

சமீபத்தில் யாழ். அரசாங்க அதிபர் எழுதிய கடிதத்தின் பின்னரும் அரசாங்கம் இது பற்றி மௌனம் சாதித்து வருகிறது.

இந்த வருடத்தில் ஜனவரி. பெப்ரவரி மாதங்களுக்கு மட்டுமே மீனவர் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

கடல் வலய தடைச் சட்டம் அமுலில் இருப்பதால் தொடர்ந்து நிவாரணம் கோரப்படுகின்றபோதிலும் அரசாங்கம் இவ் விடயத்தில் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கடல் வலய தடைச் சட்ட நீக்கம் பற்றி பாதுகாப்பு

(4ஆம் பக்கம் பார்க்க)

## 3000 ஆண்டு பழமையான சடலம் ஈரானில் மீட்பு

(தெஹறான்)

சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உயிரிழந்தவரின் சடலம் ஈரான் நாட்டின் உப்பளத்திற்கு சமீபமாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இச் சடலத்தில் அதிசயிக்கத்தக்க விதத்தில் அவரின் தலைமுடி, கண்கள், காதுகள், மூக்கு, மீசை, வெண்தாடி என்பன அப்படியே அழிவின்றி காணப்பட்டன. இறந்த மனிதனின் இடதுகாலில் தோலிலான காலணி காணப்படுகின்றது. இடுப்பில் கம்பளி நூலினாலான சயிறு காணப்படுகிறது. அதில் நீண்ட கத்தி காணப்படுகிறது. இடது காதில் தங்கத்தாலான தோடு காணப்படுகிறது.

இலாமியர், பாபிலோனியர், அசிரியர் அணிந்த ஆடையே இச் சடலத்திலும் காணப்பட்டது ஈரான், சஞ்சான் மாகாணத்தில் ஹம்செலு உப்பளத்தில் இச் சடலம் மீட்கப்பட்டது.

# வரி விளம்பரம்

**தேவை**

திருநெல்வேலியில் இயங்கும் ஆடைதயாரிக்கும் தொழிற்சாலைக்கு பிறேசியர் தைப்பதில் நன்கு அனுபவம் வாய்ந்த பெண் தொழிலாளர்களும், பெண்களுக்கான நவீன ஆடைகளை வெட்டுவதிலும், தைப்பதிலும் நன்கு அனுபவம் வாய்ந்த பெண் தொழிலாளர்களும் தேவை 16-05 94க்குமுன் விண்ணப்பிக்கவும். விள.இல. 330 மே|பா ஈழநாதம் யாழ்ப்பாணம்.

(8228)

**கல் தேக்கு விதை தேவை**

கல்தேக்கு (கத்தாப்பு) விதை விலைக்கு வாங்குகிறோம், தொடர்பு - மில்க்வைற் (சி-9376)


# மொழிபெயர்ப்பாளர்கள் தேவை

யாழ். நகரிலுள்ள பிரபல்யமான நிறுவனம் ஒன்றிற்கு ஆங்கிலம் - தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் தேவை.

விண்ணப்பங்கள் யாவும் 25 - 05 - 94க்கு முன்னர் எமக்கு கிடைக்குமாறு விண்ணப்பிக்கவும்

தொடர்பு:

விள. இல. 331
மே|பா ஈழநாதம்
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி 9379)

# யாழ். குடாநாட்டில் 2 லட்சம் குடும்பங்கள்

**கணிப்பீடு தரும் தகவல்**

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இரண்டு லட்சத்து இரண்டு ஆயிரத்து எண்ணூற்றி தொண்ணூற்றிநான்கு (2,02,894) குடும்பங்கள் இருப்பதாக இறுதியாக எடுக்கப்பட்ட தகவல்கள் மூலம் தெரிய வருகின்றது.

மேற்படி தகவல் ஒவ்வொரு பிரதேச செயலகங்கள் ஊடாக எடுக்கப்பட்ட தகவல்களை கொண்டு எடுக்கப்பட்டுள்ளதாகவும் இவை ஓரளவுக்கு சரியான தகவல் என்றே கொள்ளக்கூடியதாக இருக்கும் என தெரிய வருகின்றது. (நி,க)

**திருமலை துறைமுக பகுதியில்**

# கைத்தொழில் பேட்டை 400 குடும்பம் பாதிப்பு

(திருமலை)

திருக்கோணமலை கப்பல் துறை பகுதியில் கைத்தொழில் பேட்டை அமைக்க அரசு உத்தேசித்திருப்பது இப்பகுதியில் நிரந்தரமாக குடியிருக்கும் மக்களை வெளியேறச் செய்வதாக அமைந்துவிடும் என புகாரிடப்பட்டுள்ளது.

உத்தேச பகுதியில் சுமார் 400 குடும்பங்கள் வசிக்கின்றன.

# நினைவு கூருகின்றோம்: 10.05.1994

1985-ம் ஆண்டு இதேதினத்தில் மன்னார்-காவல் நிலையத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**சுரேசன்** (சோமசுந்தரம் சிறிக்குமார்-அரசடி, கொக்குவில் மேற்கு-யாழ்)

1986 ம் ஆண்டு யாழ் அளவெட்டிப் பயிற்சி முகாமில் எதிர்பாராத வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,

**பி புனிதமூர்த்தி** (மலையகம்)

மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தினர் முற்றுகையிட்டு மேற்கொண்ட துப்பாககிச்சூட்டில் வீரச்சாவெய்திய,

**கிங்ஸ்லி-சவுரி** (-இராசதுரை-முருங்கன்-மன்னார்)
**சகாயம்-கோபி** (- சந்தியோகு - முருங்கன் - மன்னார்)

1988-ம் ஆண்டு யாழ்-பருத்தித்துறை திக்கம் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**கப்டன் ரஜாஸ்** (செல்வன் ஈஸ்வரஜீவா - புத்தூர் கிழக்கு-யாழ்)

இதே சமரின்போது விழுப்புண்ணடைந்த நிலையில் தன்னைத்தானே சுட்டு வீரச்சாவெய்திய,

**லெப் வெங்கடேஸ்** (சண்முகசுந்தரம் ஜீவகரன்-இன்பருட்டி, அல்வாய்வடக்கு-யாழ்)

வவுனியாவிலிருந்து திருமலையை நோக்கிச்சென்ற சிற்றூர்தி ஒன்றின்மீது, கெப்பிட்டி கொல்லாவைப் பகுதியில் வைத்து கறுப்புச்சட்டைக்காரர்கள் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட பெண் குழந்தை, மற்றும் இளம்பெண்

1989 ம் ஆண்டு யாழ்-லடன் சந்தியில் தேசவிரோதசக்திகளினால் கொலை செய்யப்பட்ட,

**சமா-திலீபன்** (கறுப்பைய சந்திரன்-234 2 செபஸ்ரியான்வீதி ஒட்டுமடம்)

யாழ்ப்பாணத்தில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட-யாழ்-பரியோவான் கல்லூரி மாணவன்

199'-ம் ஆண்டு அம்பாறை-தம்பிலுவில், களப்புப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது விழுப்புண்ணடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**மகான்** (மார்க்கண்டு ராஜா-தம்பிலுவில்- அம்பாறை)
**ஆனந்த்** (நாகராசா நந்தகுமார்-அம்பாறை)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட களுவங்கேணி-01 ஐச் சேர்ந்த தமிழ்க் கடற்றொழிலாளி,

1993-ம் ஆண்டு மணலாற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர்ச்சமரில் வீரச்சாவெய்திய,


**கப்டன் வளவர்கோன்-ஜீவகுமார்** (இளைய

# நினைவில் இன்று முதலாண்டு



லெப் தமிழ்வளவன்
வேலு சண்முகம்

# 6-ம் ஆண்டு நினைவலைகள்



கடற்புலி லெப். வெங்கடேஸ்

# 31-ம் நாள் நினைவஞ்சலி



வீரவேங்கை வாணன்
அ. குயின்ரன் குளோறியன் (அன்ரன்)

லெப் தமிழ்மன்னன்
வேலு சண்முகம்
சுன்னாகம் தெற்கு.

காவியமே!
உன்னைக் காணாமல்
சாடமுடிகின்றது.
ஒவியமான உன் முகம்
பார்த்து
காத்திருக்கிறோம்

— குடும்பத்தினர்
நண்பர்கள்,
சகபோராளிகள்.
(8224)

---

கடற்புலி லெப். வெங்கடேஸ்
(சண்முகசுந்தரம் ஜீவாகரன்)

| பிறப்பு: | வீரச்சாவு: |
|---|---|
| 1 : 04 . 1968 | 10 . 5 . 1988 |

இன்பருட்டி மண்ணில் மழலையாய் வந்துதித்த
மாதவச்செல்வனே '' வெங்கடேஸ் '' - நீயும்
வீரமறவன் வழியிலே மண்மீட்கும் போரிலே......
மண்ணுக்கு வித்தாகிப் போனாய்......
தமிழீழ தேசமதின் விடிவிற்காய் உனையீந்தாய்
தரணியில் என்றும் மரணமில்லை உந்தனுக்கு.

இன்று (10-5-94) எமதில்லத்தில் நடைபெறும் மதிய போசன விருந்தில் கலந்து கொள்ளுமாறு சக போராளிகளையும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்
(ச. சண்முகசுந்தரம்)
இன்பருட்டி,
அல்வாய், பருத்தித்துறை. (8238)

---

வீரவேங்கை வாணன்
அ. குயின்ரன் குளோறியன் (அன்ரன்)
(புங்குடுதீவு 11 ம் வட்டாரம்)

| தாயின்மடியில் | தாயகமண்ணில் |
|---|---|
| 1977 08-31 | 1994-04-10 |

தலைவனின் வளர்ப்பில் பண்பாக வளர்ந்தாய்
எதிரியின் பாசறை அழித்திட விரைந்தாய்
கொட்டும் குண்டு மழையில்
தமிழீழ விடுதலைக்காய் தளைத்தாய்
நெஞ்சினில் விடுதலைக் கனலைச் சுமந்தாய்
கல்லறைக்குள் உறங்கும் காவியப் புலியே
உன் உடல் மட்டும் தான் தூங்குகிறதே அன்றி
உன் இலட்சியக் கனவுகள் தூங்கவில்லை

உன் பிரிவால் துயருறும்
பப்பா, மம்மி, சகோதரிகள்,
மற்றும் உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்.

தற்காலிக முகவரி
B 11 தொடர்மாடி
குருநகர், யாழ்ப்பாணம் (8239)

---

1990-ம் ஆண்டு மணலாற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர்ச்சமரில் வீரச்சாவெய்திய,
கப்டன் வளவர் கோண்-ஜீவகுமார் (இளைய தம்பி மோட்சேந்திரன்-மட்டு)
லெப்.தமிழ்மங்லன்-சுந்தரேஸ் (வேலுசண்முகம் - சுண்ணாகம் தெற்கு-யாழ்)
முல்லைத்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,
கப்டன் அகிலன் (ஆறுமுகம் சிவஞானம்)- அராலி கிழக்கு-வட்டுக்கோட்டை-யாழ்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

❋ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

தமிழீழ விடுதலைப் புலிகள்
(சி-9374)

---

## உணவு முத்திரைகள்

(கொழும்புத்துறை)
அன்னமயில் கோமாரி கப்பல் மூலம் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்ட ஒன்பதாவது தொடரிலக்க வறுமை நிவாரண உணவு முத்திரைகள் யாழ். சமூக சேவைப் பகுதிக்கு கடந்த 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை வந்து சேர்ந்துள்ளன.

கடந்த ஏப்ரல் முதல் 95-ம் ஆண்டு ஏப்ரல் வரை இந்த உணவு முத்திரைகள் யாவும் செல்லுபடியாகுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

## தடுப்பூசி

குருசோ் வீதி கிறீன் பில்ட் சனசமூக நிலையத்தில் இன்று செவ்வாய் பிற்பகல் 2 மணிக்குகோழிகளுக்கு நோய்த் தடுப்பூசி போடப்படும்.

## வரவு வெளியீடு

யாழ் இந்துக்கல்லூரி வர்த்தக மாணவர் ஒன்றியத்தின் வரவு மலர்வெளியீடு நாளை புதன்காலை11மணிக்குகுமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக கல்வித் துறை விரிவுரையாளர் மா. சின்னத்தம்பி கலந்து கொள்வார்.

## இருவருக்குப் பரிசு

நாடு பூராவுமுள்ள இலங்கை வங்கி சர்வதேசப் பிரிவுகளில் வதியாதோர் வெளிநாட்டு நாணய கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்களிடையில் இலங்கை வங்கி தலைமைக் காரியாலயம் வருடம் இருமுறை அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு நடாத்தி வருகின்றது. கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற சீட்டிழுப்பில் இலங்கை வங்கி யாழ் சர்வதேசப்பிரிவில் கணக்கு வைத்திருக்கும் இருவருக்கு முறையே 1ஆம் 3ஆம் பரிசில்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

---

உ

## அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில்
## பவ வருட மகோற்சவம் (1994)

**கொடியேற்றம்**
14. 5. 94 சனிக்கிழமை காலை 10.30 மணியளவில்

திருவிழாக்கால நேர அட்டவணை

| | | பகல் | | இரவு |
|---|---|---|---|---|
| அபிஷேகம் | காலை | 8. 30 | மாலை | — |
| பூசை | " | 9- 15 | " | 8. 30 |
| தம்ப பூசை | " | 10- 00 | " | 4- 00 |
| வசந்த மண்டபப் பூசை | " | 10. 30 | " | 4. 30 |
| திருவிழாப் பூர்த்தி | பி. ப | 1. 00 | " | 6- 00 |

**சப்பறத் திருவிழா**
22 . 5 . 94 ஞாயிற்றுக்கிழமை மாலை 5. 00 மணியளவில்

**தேர்த் திருவிழா**
23 . 5 . 94 திங்கட்கிழமை காலை 9. 00 மணியளவில்

**தீர்த்தத் திருவிழா**
24 . 5 . 94 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில்

தேர், தீர்த்தத் திருவிழாக் கால நேர அட்டவணை

| | தேர் | | தீர்த்தம் | |
|---|---|---|---|---|
| | காலை | மாலை | காலை | மாலை |
| அபிஷேகம் | 6. 30 | — | 6. 30 | — |
| பூசை | 7. 00 | 4- 00 | 7. 00 | 3. 00 |
| தம்ப பூசை | 7- 30 | 4- 30 | 7- 30 | 4. 30 (கொடியிறக்கம்) |
| வசந்தமண்டபப் பூசை | 8. 00 | 5. 00 | 9. 00 | 8. 30 |
| மகா தீர்த்தம் | — | — | 10. 00 | — |

தேர்த்திருவிழாவன்று பி: ப. 2. 00 மணியளவில் தேர் மண்டபத்தில் பஞ்சமுக அர்ச்சனை நடைபெற்று பி; ப. 3. 30 மணியளவில் மூர்த்திகள் ஆலயத்திற்கு எழுந்தருள்வர்.

**பூங்காவனத் திருவிழா**
25 . 5 . 94 புதன்கிழமை பகல் அபிஷேகம் நடைபெறும் இரவுத் திருவிழா மாலை 6. 00 மணிக்குப் பூர்த்தியடையும்.

குறிப்பு: தேர்த் திருவிழா அன்னதானத்துக்கு உதவுபவர்கள் செயலகத்திற் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும் அன்னதானத்துக்கு மூடையாக அரிசி வழங்குபவர்கள் தயவு செய்து அதற்குரிய தொகையைப் பணமாகச் செலுத்தவும்.

9 - 5 - 94 (8235) - ஆலய நிர்வாகம் -

---


உறுதியான கணனிக்கல்விக்கு!

# UNKCO



*Computer Centre*

எதிர்வரும் 15-ம், 16-ம் திகதிகளில்
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

- BASIC Language (Including ADVANCED BASIC)
- PASCAL Language
- dBASE III plus and MS - DOS
- LOTUS 1-2-3 and MS - DOS
- WORD PROCESSING (WORD STAR PROFESSIONAL Rel 5·5) and MS - DOS

குறிப்பு: ❋ காலை மாலை வகுப்புகள் நடைபெறும்
❋ கட்டணங்கள் பகுதி பகுதியாகச் செலுத்தப்படலாம்

வாரநாள் வகுப்புகள் ஆரம்பம்: 16-5-94
சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம்: 15-05-94

JOIN WITH US TO STUDY THE LATEST COMPUTER TECHNOLOGY

மேலதிக விபரங்கட்கு :
வெலிங்டன் சந்திக்கருகில்!
37, Clock Tower Road,
JAFFNA.
(சி-9378)

**சிந்தனைக்கு**

பின்னால் நேரக்கூடிய நிகழ்வுகளை எதிர்நோக்கி நிற்பவர் விவேகமுள்ள அரசியல்வாதி.
நடந்துவிட்ட நிகழ்வுகளால் நடத்திச் செல்லப்படுபவர் விவேகமற்றவர்.

- லெனின்


ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 10-05-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05


## ஜெயலலிதாவின் பித்தலாட்டம்

தமிழ் அகதிகள் விவகாரத்தில் மீண்டும் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தீவிர கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளார். இலங்கைக்கு அகதிகளைத் திருப்பி அனுப்பும் சூழ்நிலை இல்லையென அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளபோதும், 'என் என்றால் எண்ணெயாய் நிற்கும்' ஜெயலலிதாவின் அரச அதிகாரிகளும் வலுக்கட்டாயமாகவேனும் தமிழ் அகதிகளை வெளியேற்றிவிடும் முயற்சியில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

இதன்பிரகாரம், தமிழக அகதிமுகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் மீது பல்வேறு நிர்ப்பந்தங்கள் பிரயோகிக்கப்பட்டுவருவதாக அறியமுடிகிறது. வெளியேறுவதற்கான பத்திரத்தில் கையொப்பமிடும் வரை நிவாரண நிறுத்தம், உதவிப்பணம் நிறுத்தம் என்பனவற்றை அதிகாரிகள் மேற்கொண்டு வருவதோடு, வெளியில் வேலைக்குச் செல்வதற்கும்தடைவிதித்துள்ளனர் மேலும் மாணவரின் ஆண்டு இறுதிப் பரீட்சையின்போது மின்சாரம் துண்டித்தல் போன்ற கேவலமான வழிமுறைகளையும் கைக்கொண்டுள்ளனர். இதுகுறித்து, அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலயத்திலும், மாவட்ட கலக்டர்கள் இடத்திலும் தமிழகத்திலுள்ள அகதிகள் முறைப்பாடும் செய்துள்ளனர்.

தமிழ் அகதிகள் விவகாரத்தில் செல்வி ஜெயலலிதா எப்பொழுதும் மனிதாபிமானத்திற்கும், இன உணர்விற்கும் அப்பாற்பட்ட விதத்திலேயே நடந்துகொண்டுள்ளார் இருப்பினும், கடந்த சில மாதங்களாக இவ்விடயத்தில் சற்று வேகத்தைத் தணித்திருந்த தமிழக முதலமைச்சர் மீண்டும் இலங்கைத் தமிழ் அகதிகள் விவகாரத்தில்

# சிங்கள அரசியற் கட்சிகள் எதுவும் நேர்மையான தீர்வு தரமாட்டாது

## கொழும்பு தமிழ் மக்கள் பணிக்குழு அறிக்கை

(கொழும்பு)

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை சிங்கள மக்கள் தமது அரசியல் தலைமைத்துவம் மூலம் அங்கீகரிக்க வேண்டும். தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாணவென சிங்கள மக்கள் தலைமைத்துவத்துக்கூடாகபேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று கொழும்புவாழ் தமிழ்மக்கள் பணிக்குழுவேண்டுகோள் விடுத்துள்ளது

இது தொடர்பாக கொழும்பு வாழ் தமிழ்மக்கள் பணிக்குழுவின் தலைவரான டாக்டர் வேலாயுதபிள்ளை என்பவரும் செயலாளர் டாக்டர் எஸ். சதானந்தனும் விரிவான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: வடக்கு-கிழக்கு மாகாணங்களில் 10 வருடங்களாக வன்முறை தலைதூக்கி வருகிறது. இதில் நூற்றுக்கணக்கான தமிழ், முஸ்லிம்மற்றும் சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளனர் அல்லது ஊனமடைந்துள்ளனர். நூற்றுக்கணக்கான கோடி ரூபா பெறுமதி வாய்ந்த சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. பல்லாயிரம் தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

பெரும்பாலான சிங்கள அரசியல் கட்சிகள் தமிழர் பிரச்சினையைத்தீர்ப்பதற்கான அரசியல் தீர்வொன்றையும் முன்வைக்க இன்னமும் மறுத்து வருகின்றனர் அல்லாமலும் இக்கட்சிகளில் சில முன்னர் உடன்பட்டுக் கொண்ட நிலைமையிலிருந்து நேர்மையீனமாகப் பின் வாங்கியுமுள்ளனர். சிங்கள அரசியல் கட்சிகளின் கபட நாடகத்தையும் இரட்டைவேடத்தையும் தமிழர்கள் வெறுக்கின்றனர்.

இதைவிட மோசமான போக்கு கடந்த ஒருவருடகாலமாக வெளிக்கிளம்பியுள்ளது. அரசாங்கத்திலிருக்கும் ஒரு சிலரும் சில எதிர்க்கட்சிகளும் சேர்ந்து தமிழர் பிரச்சினை என்று ஒன்றில்லை பயங்கரவாதப் பிரச்சினை ஒன்றே உள்ளது என்ற கருத்தை ஆதரிக்கத் தலைப்பட்டுள்ளனர்.

அரசியல் தீர்வொன்றை முன் வைக்காமல் தமிழர்களுக்கு எதிராக அரச பயங்கரவாதமொன்றைக் கட்டவிழ்த்துவிடுவதினை நியாயப்படுத்தி தமிழர்களின் போராட்டங்களையும் தியாகங்களையும் மாற்றி எழுதுவதற்கான முயற்சிகளைத் தமிழர்கள் கண்டிக்கின்றனர்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்களின் 50வீதமானோர் விடுதலைப் புலிகளின் 'பயங்கரவாத' நடவடிக்கைகளினால் தமது பாரம்பரிய தாயகத்தைவிட்டு விரட்டியடிக்கப்பட்டுள்ளனர் எனவும் அநேகமான தமிழ்மக்கள் அரசாங்கத்தின் பாதுகாப்பின் கீழ் சிங்கள மக்கள் மத்தியில் சந்தோசமாக வாழ்கிறார்கள் எனவும் உண்மைக்கு மாறான பிரசாரம் ஒன்று நடத்தப்பட்டு வருகிறது.

உண்மையில் வடக்கு-கிழக்குப் பிரதேசம் ஓர் போர்ப்பிரதேசமாகும். ஆகவே இராணுவத் தாக்குதலிலிருந்தும் குண்டு வீச்சுக்களிலிருந்தும் அரசாங்கத்தின் பொருளாதாரத் தடையிலிருந்தும் தப்புவதற்காக தமிழர்கள் அங்கிருந்து வெளியேறுகின்றனர்.

இவர்கள் வடக்கு - கிழக்கு மாகாணங்களிலிருந்தும் இலங்கையின் ஏனைய பகுதிகளிலிருந்தும் இங்கு வந்து குடியேறியவர்களாவர். சிறிலங்கா படையினரால் மனம்போனபடி கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு முடிவில்லாதுன்பத்துக்கு உள்ளாக்கப்படுவதை இவர்கள் வன்மையாக கண்டிக்கின்றனர் இவர்கள் பல்வேறு சமூக பொருளாதார நெருக்குதலுக்கு உள்ளாகின்றனர்.

கடந்த காலங்களில் கொழும்பு வாழ் தமிழர்கள் தங்கள் அரசியல் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக சிங்கள கட்சியொன்றையோ மற்றொன்றையோ நம்பியிருந்தனர்; ஆனால் ஒவ்வொரு தடவையும் அவர்களதுநம்பிக்கைகள் கைகூடவே இல்லை.

ஒன்றிணைந்த ஒருமைப்பாடான செயற்பாடு மூலமே தமிழரின் உரிமை நிலை நாட்டப்படும் என்பதில் கொழும்பு வாழ் தமிழர்கள் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளனர். இவர்கள் அரசியல் ரீதியாக ஒன்றிணைந்து இலங்கையின் ஏனைய தமிழ் மக்களுடன் சேர்ந்து நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளனர் எந்தவொரு சிங்கள அரசியல் கட்சியும் நேர்மையுடனும் விசுவாசமாகவும் தமிழர் பிரச்சினையை தீர்க்க முன்வரும் என இனிமேலும் நம்புவது முடியாது.

ஆகவே நாங்கள் பின்வருமாறு சிங்கள மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

தமிழர்களும் தனித்துவமானவர்கள் என்ற அடிப்படையில் தமிழர்களின் பாராதீனப்படுத்த முடியாத சுயநிர்ணய உரிமையை சிங்கள மக்கள் தமது அரசியல் தலைமையூடாக அங்கீகரிக்க வேண்டும்.

சிங்கள மக்கள் தமது அரசியல் தலைமைத்துவத்துக்கூடாக தமிழர் பிரச்சினைக்கான தமது தீர்வை உடனடியாகவும் பகிரங்கமாகவும் முன் வைக்க வேண்டும்.

பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக தமது அரசியல் தலைமைத்துவத்துக்கு ஊடாக பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.

### பழுதான இறைச்சி விற்றவர் கண்டுபிடிப்பு

(தென்மராட்சி)

மிகவும் பழுதடைந்த மரை இறைச்சி 21 கிலோவை விற்பனைக்காக துணுக்காய்ப்பகுதியில் இருந்துகொண்டு வந்த வியாபாரி சாவகச்சேரி மீன் சந்தையில் வைத்து கிலோ 180 ரூபாவிற்கு விற்றபோது பிடிக்கப்பட்டார்.

சாவகச்சேரி நகர பொது சுகாதார பரிசோதகர் திடீர் என பரிசோதனையில் ஈடுபட்டபோது இவர் பிடிபட்டார் இறைச்சி பரிசீலிக்கப்பட்டு பாவனைக்கு உதவாதது என அழிக்கப்பட்டது.

(86)

நான்காம் மாடியில் நான்கு மாதங்கள்

## தடுத்து வைக்கப்பட்டவருக்கு சுவிஸில் அரசியல் புகலிடம்

கொழும்பில் இனம் தெரியாத நபர்களால் கைது செய்யப்பட்டு இராணுவ முகாமிலும் இரகசிய பொலிஸ் அலுவலகத்தின் நான்காவது மாடியிலும் நான்கு மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த பின் விடுதலை செய்யப்பட்ட தமிழ் இளைஞர் ஒருவருக்கு சுவிஸ் அரசாங்கம் அரசியல் புகலிடம் வழங்கியுள்ளது.

அருள்ராஜ் என்ற மேற்படி இளைஞர் தடுப்புக்காவலில் இருந்த போது கொழும்புக்கு விஜயம்செய்த சர்வதேச மன்னிப்புச் சபை பிரதிநிதி ஒருவர் இவரைப் பார்வையிட்டு விபரங்களைக் கேட்டறிந்ததுடன் இரகசியப் பொலிசாரையும் மேற்படி கைது குறித்து விசாரித்துச் சென்றிருந்தார். மன்னிப்புச்சபைப் பிரதிநிதி மேற்படிகைது தடுப்புக்காவல் ஆகியன சட்ட விரோதமானது என்றும் இதன் போது அருள்தாஸ் இம்சைப்படுத்தப்பட்டார் என்றும் சர்வதேச மன்னிப்புச்சபை பெப்ரவரி மாத அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். மேற்படி அறிக்கையின் பிரதியொன்றை இணைத்து புகலிடம் அளிக்குமாறு கோரி கொழும்பிலுள்ள சுவிற்சலாந்து தூதுவராலயத்திற்கு அருள்தாஸ் விண்ணப்பித்திருந்தார்.

விண்ணப்பம் சுவிஸ் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு அங்கு விசேட சிபார்சுடன் கொழும்புக்கு அனுப்பப்பட்டிருந்தது. இதனையடுத்து அருள்தாசின் பம்பலப்பிட்டி இல்லத்துக்குச்சென்றசுவிற்சலாந்து தூதரக அதிகாரிகள் உடனடியாகவே அருள்தாசையும் அவரது குடும்பத்தினரையும் சுவிஸ்சலாந்துக்கு அனுப்பலாம் எனத் தெரிவித்தனர்.

தாயாருடன் வசித்து வந்த அருள்தாஸ் தற்போது தான் மாத்திரமேகொழும்பிலிருந்து புறப்பட வேண்டுமென்றும் தாயார் தொடர்ந்து கொழும்பிலிருப்பார் என்றும் தெரிவித்தார்.

இதனையடுத்து அருள்தாஸிற்கு விசேட விசா வழங்கிய அதிகாரிகள் விமான ரிக்கற்றும் வழங்கி அனுப்பி வைத்தனர்.

## கிராமசேவகர்களுக்கு மோட்டார் சைக்கிள்

மீண்டும் இலங்கைத் தமிழ் அகதிகள் விவகாரத்தில் தனது கவனத்தைத் திருப்பியுள்ளமையானது வழமை போல் உள்நாட்டில் எழுந்த அரசியல் நெருக்கடியைத் திசைதிருப்பும் நோக்கம்கொண்டது என்பதும் புதிய தொன்றல்ல.

சுமார் ஒரு வருடத்திற்கு மேலாக மத்திய அரசுடன் ஜெயலலிதா முரண்பட்ட போக்கைக் கடைப்பிடித்துவரினும், பிரதமர் நரசிம்மராவ் இவ்விடயத்தில் சற்று மெத்தனப்போக்கைக் கடைப்பிடித்துவந்ததாகவே கருத இடமுண்டு. எதிர்க்கட்சிகளின் அரசுகள் இருக்கும் மாநிலங்களில் ஆட்சிக்கவிழ்ப்பில் காங்கிரஸ் கட்சி வழமையாகக் காட்டும் அக்கறை இங்கு காட்டப்படவில்லை என்றே கூறலாம்.

இதன்காரணமாக ஜெயலலிதா ஆட்சிமீது எதிர்க்கட்சிகள் பெரும் ஊழல் புகார்களை வைத்தபோதும், ஆளுநர் சென்னாரெட்டிக்கும் - ஜெயலலிதாவிற்கும் இடையில் முரண்பாடுகள் உருவானபோதும், தமிழக காங்கிரஸ் கட்சியினர் ஜெயலலிதா அரசை 'டிஸ்மிஸ்' செய்யுமாறு கோரியபோதும் நரசிம்மராவ் மௌனம் சாதித்தே வந்தார்.

ஆனால், ஜெயலலிதா அண்மையில், சட்டசபையில் பிரதமர் நரசிம்மராவையும், மத்தியில் உள்ள காங்கிரஸ் அரசையும் கடுமையாக விமர்சித்தமையானது நரசிம்மராவைப் பொறுத்து சற்று சினத்தை ஏற்படுத்தியது. அதிலும், தமிழகத்தில் இன்று அதிகரித்துள்ள வீதிக் கொள்ளைகள் மத்திய அரசு தமிழக அரசைக் கலைப்பதற்காக மேற்கொள்ளும் திட்டமிட்ட செயல் என்ற ஜெயலலிதாவின் குற்றச்சாட்டு மத்தியில் ஆத்திரத்தை ஏற்படுத்துவதற்கு முக்கியமான காரணியாக அமைந்தது.

இதனைத் தொடர்ந்தே ஜெயலலிதா விடயத்தில் ராவின் கவனம் திரும்பியது. இதன்பின்னரே உள்துறை அமைச்சர் சவான் தமிழ்நாட்டிற்கு விஜயம்மேற்கொண்டதாகவும், ஜெயலலிதா அரசின் நடவடிக்கைகள் குறித்து தகவல்களைப் பெற்றுக்கொண்டதாகவும், கொள்ள முடியும் இதன் அடிப்படையிலேயே சுப்பிரமணிய சுவாமியின் ஊழல் வழக்குமீது முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கு உயர் நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்ப உத்தரவு இட்டதையும் பார்க்க முடியும்.

இவ்வாறாக நரசிம்மராவ் தொடங்கிய இந்நடவடிக்கைகள் மூலம் வரப்போகும் ஆபத்தை ஜெயலலிதா உணர்ந்துகொண்டார். இந்நிலையில்தான். மத்திய அரசுமீது சுமத்திய குற்றச்சாட்டை மீளப்பெற்றுக் கொள்வது போன்ற நடவடிக்கையில் இறங்கினார். வீதிக் கொள்ளைக் குற்றச்சாட்டை இலங்கைத் தமிழ் அகதிகள் மீது சுமத்தினார். இதனைக் காரணம்காட்டி இலங்கைத்தமிழ் அகதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளையும் முடுக்கிவிட்டுள்ளார். இதன்மூலம் மத்திய அரசுடனான முறுகல்நிலையைத் தணித்துக்கொள்ளவும் தமது அரசைக் காப்பாற்றிக்கொள்வதிலும் முனைப்பாகவுள்ளனர்.

இலங்கைத்தமிழ் அகதிகள் விவகாரத்திலும் விடுதலைப்புலிகள் விவகாரத்திலும் ஜெயலலிதாவின் இந்நிலைப்பாடானது புதியதொன்றல்ல. ஆயினும், இது கேவலமானது. தமது ஆட்சி அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அப்பாவிகளாக தஞ்சம்கோரியவர்களை காட்டிக் கொடுப்பதும் தமது இனத்தையே பகடைக்காய்களாகி பலியிட நினைப்பதும் அருவருக்கத்தக்க அரசியல்வழி முறையாகும்

# கொழும்பு பங்குச்சந்தை வீழ்ச்சி குண்டுவெடிப்புகளின் எதிரொலி

## வெளிநாட்டு முதலீட்டாளர் பின்வாங்கல்

(கொழும்பு)

அண்மைக்காலத்தில் வீழ்ச்சிப் போக்கினை எதிர்நோக்கியிருந்த இலங்கை பங்குச் சந்தை விலைகள் எதிர்பாராத வகையில் மேலும் பலமடங்கு வீழ்ச்சியடைந்துள்ளன. பங்குச் சந்தையில் விலை வீழ்ச்சியினை எதிர்நோக்கி இருக்கும் முக்கிய நிறுவனங்களில் அட்கின்ஸ்பென்ஸ், அசோசியேட்டட் மோட்டர் வேஸ், ஆர்ப்பிகோ பினான்ஸ், ஏசியன் ஹோட்டல், பிரவுன்ஸ்பீச், சென்ரல் பினான்ஸ், கொமர்ஷல் வங்கி, அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனம், ஹேலீஸ், லங்கா அசோக், லங்கெம், எல். ஓ. எல். சி., தேசிய அபிவிருத்தி வங்கி, ரிச்சர்ட் பீரிஸ், சதொச மோட்டர்ஸ் ஆகியனவும் அடங்கும்.

இதற்கு முக்கிய காரணம் அண்மையில் நடந்து முடிந்த தென்மாகாணசபை தேர்தல் முடிவு, அதைத் தொடர்ந்து கொழும்பு ஹோட்டல் குண்டு வெடிப்புகள்தான் எனவும் இது வெளிநாட்டு பங்கு சந்தை முதலீட்டாளர் மத்தியில் தயக்கத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும் பங்குசந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.

தலைநகரில் வெடித்த நான்குகுண்டுகளும் சாதாரண வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்தவில்லையாயினும் அது வெளிநாட்டு வர்த்தக சமூகத்தினரிடையே பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அந்தந்த நாட்டு தூதரகங்கள் தத்தம் நாட்டு அரசுகளை இது தொடர்பில் நிதானித்து நடந்து கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளதாகவும் தெரியவருகிறது.

# நிர்வாகசேவை எழுதுநர் வெற்றிடம் நிரப்ப முடிவு

[கொழும்பு]

அரசாங்க துறையில் நிர்வாகசேவை எழுதுநர் மற்றும் நடுத்தர சேவை வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வெற்றிடங்களை நிரப்புவதிலுள்ள காலதாமதங்களை நிவர்த்திப்பது தொடர்பாக பொது நிர்வாக அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தலைமையில் பொது நிர்வாக அமைச்சில் கடந்த வியாழக்கிழமை கூட்டமொன்று நடைபெற்றது.

# ஞாபகார்த்த உரை

பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஞாபகார்த்த சொற்பொழிவு எதிர்வரும் 18 ஆம் திகதி மாலை 4 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் டாக்டர் டி.ஜே சோமசுந்தரம் தன்னாத்மாவை தேடிஅலையும் மனிதன் என்ற ஞாபகார்த்த உரையை ஆற்றுவார்

# பயன்தரு மரங்கள் ராணுவத்தால் அழிப்பு

தும்பங்கேணி பகுதியில் பல பயன்தரு மரங்களை வெட்டி சிறிலங்கா இராணுவத்தினர் தமது தேவைகளுக்கு பயன்படுத்தி வருகின்றனர்.

கடந்த சில தினங்களாக தும்பங்கேணி சிறிலங்கா இராணுவத்தினரே அப்பகுதியில் உள்ள தென்னை, பனை, தேக்கு போன்ற பல பயன்தரு மரங்களையும் வெட்டிச் செல்வதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# தொற்று நீக்கிய பின்னர் செப்டிசீமியா பாதிப்பு தணிவு

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலையில் சிறுவர்களுக்கான சிகிச்சைக்களம் தொற்று நீக்கம் செய்ததை தொடர்ந்து புதிதாக ஒருவரும் செப்டிசீமியா நோயினால் பாதிக்கப்படவில்லை என வைத்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சென்ற மாதம் 20-ம் திகதி மேற்படி சிகிச்சைக் களம் தொற்று நீக்கம் செய்யப்பட்டதாகவும் அதன் பின்னர் இரண்டு அல்லது மூவர் மட்டுமே இந்த நோயினால் மரணம் அடைந்ததாகவும் இவர்கள் இச் சிகிச்சைக் களம் தொற்று நீக்கம் செய்ய முன்னரே மேற்படி நோயினால் பாதிப்படைந்து காணப்பட்டதாகவும் மேலும் தெரிய வருகின்றது.

தொடர்ந்துசிகிச்சைக்களங்கள் தொற்று நீக்கம் செய்வதன் மூலம் இவை போன்ற நோய்கள் எதிர்காலத்தில் ஏற்படுவதை ஓரளவு தவிர்க்க முடியும் என்றும் யாழ். போதனா மருத்துவ மனையில் சகலசிகிச்சைக்களங்களும் இவ்வாறு தொற்று நீக்கம் செய்வதே மிகசிறந்தது என அவ் வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு தொற்று நீக்கம் செய்யும் போது யாழ். மாநகர சபை ஊழியர்களை மட்டும் எதிர்பார்க்காது யாழ். போதனா வைத்திய சாலை ஊழியர்களை பயன்படுத்த வேண்டும் என அவ்வட்டாரம் மேலும் தெரிவித்துள்ளது.

(கொழும்பு)

கிராமசேவையாளருக்கு உத்தியோக பாவனைக்காக மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன. கிராம சேவையாளர் பிரதிநிதிகளிடம் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஜோன் அமரதுங்கா இதனைத் தெரிவித்தார் கிராம சேவையாளர் பிரதிநிதிகள் முன் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் வெள்ளோட்டத்துக்கு விடப்பட்டன. கிராம சேவையாளர் பிரதிநிதிகள் வழங்கப்படவுள்ள இந்தரக மோட்டார் சைக்கிள்கள் குறித்துத் திருப்தி தெரிவித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கமரூச் கெரில்லாக்களின்

# துண்டிக்கப்பட்ட தலை படையினரால் காட்சிக்கு

(கம்போடியா)

கமரூச் கெரில்லாக்கள் சிலரின் தலைகளை கம்போடிய இராணுவத்தினர் காட்சிக்கு வைத்து கிராமத்தவர்களை எச்சரித்து வருகின்றனர்.

கம்போடியாவின் தென் பகுதி பட்டாம் பாங்கில் உள்ள கம்போடிய இராணுவத்தின் பிரதான தளத்தின் வெளிப்புறமாக கெரில்லாக்களின் தலைகள் தொங்கவிடப்பட்டன. இத்தலைகள் தொங்குவதை மேற்கத்தைய புகைப்படப் பிடிப்பாளர் ஒருவர் கண்டதையடுத்து அவற்றை படையினர் அப்புறப்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது

# 2007 இல் இந்தியாவின் பிரதமர் ஜெயலலிதாதான்

## முன்னாள் அமைச்சர் குழந்தைவேலு

(சென்னை)

21 ஆம் நூற்றாண்டு ஆரம்பத்தில் ஜெயலலிதா தான் இந்தியாவின் பிரதமர் என டில்லியில் தமிழக அரசின் சிறப்பு பிரதிநிதியும்முன்னாள் அமைச்சருமான குழந்தைவேலு தெரிவித்தார் டில்லியில் வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழக முதலமைச்சரின் ஆட்சியை வடக்கே உள்ள முதலமைச்சர்களோபாராட்டுகின்றனர் சிறந்த ஆட்சியாளராகவும் அரசியல்வாதியாகவும் அறிவும் அழகும் உள்ளவராகவும் அவரை அனைவரும் பாராட்டி பெருமைப்படுகின்றனர் இவற்றையெல்லாம் கருத்திற்கொள்ளாமல் காங்கிரஸ் பெருமக்கள் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என மூலைக்கு மூலை கதறுகின்றனர் வாய்க்கு வந்தபடி ஏசுகின்றனர் அவர்கள் ஒன்றை மறந்துவிடக்கூடாது வடக்கே காங்கிரஸ் ஆளும் மாநிலங்களில் உருப்படியான வேலை எதுவும் நடப்பதில்லை ஊழல் ஆறுபோல் பெருக்கெடுத்து ஓடுகிறது என்பதை மறந்து விடவேண்டாம் அ.தி.மு.க தேசிய கட்சியாக வளர்ந்து வருகிறது 2007ஆம் ஆண்டில் புரட்சிதலைவிதான் நாட்டின் பிரதமர் ஆவார் என சோதிடர்கள் கூறுகின்றனர் என குழந்தைவேலு மேலும் தெரிவித்தார்.

# புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994-05-10 செவ்வாய்இரவு
08.01 - ஊர்சுற்றும் ஒலி வாங்கி
08.10 - அறிந்துகொள்ளுங்கள் - தகவல் களஞ்சிய நிகழ்ச்சி
08.20 - நலந்தா[illegible]காது வலி ஏற்படுவதற்குரிய காரணங்களும் சில அறிகுறிகளும்.
08.30 - செய்திகள்
08.40 - கருத்துக்களம் - "திண்டாட்டம்"
08.50 - களமும் கானமும் - "நல்லநேரம்"
1994-05-11 - புதன் காலை
07.02 - மாவீரவணக்கம்
07.15 - நீங்கள்கேட்டவை
07.30 செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - தொடர்ந்து நீங்கள் கேட்டவை

யாழ்ப்பாணம்

# தடா சட்டத்தை தவறான முறையில் மாநில அரசுகள் பயன்படுத்துகின்றன

**- அமைச்சர் ராஜேஷ் பைலட்**

(சென்னை)

தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருப்போர் சம்பந்தமாக மாநில அரசுகளுடன் மத்திய அரசு பரிசீலனை செய்யவுள்ளது. சென்னையில் செய்தியாளரிடையே பேசிய உள்துறை இணையமைச்சர் ராஜேஷ்பைலட் இத்தகவலை வெளியிட்டார்.

தடா சட்டத்தின் கீழ் கைதாவோர் எண்ணிக்கையை பார்க்கிலும் அது பற்றி விசாரித்து வரும் வழக்குகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளது என்பது மத்திய அரசுக்கு தெரியும். ''பயங்கரவாதத்தை'' ஒடுக்குவதற்காக இச்சட்டம் கொண்டுவரப்பட்டதாயினும் சில மாநில அரசுகள் இச்சட்டத்தை அடிக்கடி பயன்படுத்துகின்றன. தடா சட்டம் தவறாக பயன்படுத்தக்கூடாது எனவும் ராஜேஷ் பைலட் தெரிவித்தார்.

1994இல் கடமையேற்ற

## ஆசிரியர் விபரத்தினை உடன் அனுப்ப பணிப்பு

1994ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஆசிரியர் நியமனங்களில் கடமை ஏற்றவர்களின் பெயர், கடமையேற்ற பாடசாலை, நியமனத்தின் வகை என்பனவைகளை உள்ளடக்கிய விபரங்களை உடன் தமக்கு அனுப்பிவைக்குமாறு வடக்குக்கிழக்கு மாகாண கல்வி அமைச்சு சகல கோட்டங்களுக்கும் பொறுப்பான பிரதிக் கல்விப்பணிப்பாளர்களையும் கேட்டுள்ளது.

அதே போன்று இந்நியமனத்தை பொறுப்பேற்காதவர்களின் பட்டியல்களையும் அனுப்பி வைக்குமாறும் இனிமேல் நியமனம் வழங்கப்பட்டு ஒருமாத காலத்தினுள் மேற்கூறிய பட்டியலை தமக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறும் வடக்குக்கிழக்கு மாகாண கல்வி அமைச்சு மேலும் பணித்துள்ளது (17)

## க. பொ. த (உ/த) மாணவருக்கு மீட்டல் வகுப்புகள்

(நல்லூர்)

சண்டிலிப்பாய், தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளிலிருந்து ஆவணி மாதம் க. பொ. த. உயர்தரப் பரீட்சை எடுக்க உள்ள மாணவர்களுக்கு புதன் கிழமை தொடக்கம் மீட்டல் வகுப்புக்களை நடாத்த சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் த. துரைசிங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

நேற்றையதினம் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இப்பகுதிப் பாடசாலை அதிபர்கள், உயர்தர வகுப்புக்களில் கற்கும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மானிப்பாய் இந்துக் கல்லூரியில் விஞ்ஞான பாட மீட்டல் வகுப்புக்களும், மானிப்பாய் மகளிர் கல்லூரியில் வர்த்தகபாட மீட்டல் வகுப்புக்களும், மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் கலைப்பாட மீட்டல் வகுப்புக்களும் சண்டிலிப்பாய்க் கோட்ட மாணவ மாணவிகளுக்காக நடாத்தப்படும். தெல்லிப்பழைக் கோட்டப் பாடசாலைமாணவ மாணவிகளுக்காக (இடம்பெயர்ந்துள்ள) மகாஜனாக் கல்லூரியில் விஞ்ஞானபாட மீட்டல் வகுப்புக்களும், (இடம்பெயர்ந்துள்ள) யூனியன் கல்லூரியில் கலை, வர்த்தகபாட மீட்டல் வகுப்புக்களும் நடைபெற ஒழுங்கு செய்ய பட்டுள்ளது.

இப்பாடநெறிகள் பாடசாலை நாட்களில் உரிய பாடசாலை நேரங்களிலேயே நடைபெறும். இதற்கென பாட போதனைகள் நடத்த ஆசிரிய ஆசிரியைகள் சண்டிலிப்பாய் கோட்டத்தினால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் எனவும் சண்டிலிப்பாய்க் கோட்டக் கல்வி அலுவலகம் தெரிவித்துள்ளது. (17)

## வடபகுதி

கடித உறைகளுக்குள் காணப்படும் பணநோட்டுக்கள் யாவும் கைப்பற்றப்பட வேண்டும் என்றும் அவசர கால சட்டத்தின் பிரகாரம் அரசாங்கம் புதிய உத்தரவு ஒன்றை சமீபத்தில் பிறப்பித்துள்ளது. இதனடிப்படையிலேயே கடற்படையினர் வடபகுதிக்கு கப்பல்மூலம் எடுத்து வரப்படும் கடிதங்களை சோதனை செய்கின்றனர்.

கடிதங்கள், புகைப்படங்கள், சிறு சஞ்சிகைகள் ஆகியவையும் கடற்படையினரால் கைப்பற்றப்படுகின்றனவே இதுஏன்? என்று எமதுசெய்தியாளர் அவரிடம் கேட்டதற்கு பண நோட்டை மட்டும் கைப்

## மாணவர் முத்திரைக்கான பொருள்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

1993- யூன், செப்ரெம்பர், ஒக்டோபர், நவப்பர், மற்றும் டிசெம்பர் ஆகிய மாதங்களுக்கான மாணவர் மதிய உணவு முத்திரைகளுக்கான கொடுப்பனவுகள் தற்சமயம் வழங்கப்பட்டு வருவதாக யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதி தெரிவித்துள்ளது

இம் முத்திரைகளுக்கு சீனி, பருப்பு, அரிசி, ஆகிய பொருள்கள் வழங்கப்பட்டு வருவதாக தெரியவருகின்றது.

எனவே மாணவர்கள் அவரவர் தங்கள் முத்திரையை பல நோ. கூ. சங்கங்களில் சமர்ப்பித்து இதற்கான கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டது (பா. தி)

## தவறு

(யாழ்ப்பாணம்)

நுணாவில் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மோட்டார்சைக்கிள் - மினிபஸ் விபத்தில் காயமடைந்த ஜெகேந்திரன் (வயது 27) என்ற இளைஞர் மரணமடைந்துவிட்டதாக வெளியாகிய தகவல் தவறானதாகும்.

தற்பொழுது யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் இவர் மரணமடைந்ததாக வெளியாகிய செய்தியையிட்டு மனம்வருந்துகிறோம்,

## கணித, விஞ்ஞான போட்டி

(யாழ்ப்பாணம்)

1994ஆம் ஆண்டிற்கான கணித. விஞ்ஞானப் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ் வலயம்-1 இற்குட்பட்ட கோட்ட மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்களுக்கானதே இப்போட்டியாகும்,

யாழ் வலயம்-1 கணித விஞ்ஞான மூலவள நிலையத்தினால் நடாத்தப்படும் மேற்படி போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான சான்றிதழ்கள் போட்டியின் இறுதியில் அன்றைய தினமே வழங்கப்படவுள்ளது என் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

## உதைபந்தாட்ட போட்டி

அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி தொடரின் இன்றைய போட்டியின் இரண்டாம் பிரிவு ஆட்டத்தில் ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உதய

# தமிழகத்தில் புலிகளின் நடவடிக்கை மத்திய அரசு தீவிர கண்காணிப்பு

(சென்னை)

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் பற்றியும் நாட்டில் உள்ள மற்றைய தீவிரவாத அமைப்புக்களுடன் அது கொண்டுள்ள தொடர்புகள் பற்றியும் மத்திய அரசு கண்காணித்து வருவதாக உள்துறை இணை அமைச்சர் ராஜேஸ் பைலட் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளரிடையே பேசியபோது விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் பற்றிய செய்தியாளரின் கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இத்தகைய சக்திகளை ஒடுக்க இந்திய அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும் எனவும் அத்துடன் தமிழக கடலோரக் காவல்படையைப் பலப்படுத்த இரண்டு கடற்படைப் பிரிவுகளை அனுப்ப வேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கையை பாதுகாப்பு அமைச்சிடம் தாம் எடுத்துரைத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

## கிராம சேவையாளர் விரைவில் நியமனம்?

(யாழ்ப்பாணம்)

போட்டிப்பரீட்சைமூலமும், நேர்முகப் பரீட்சை மூலமும் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு கிராம சேவையாளர் நியமனம் வழங்குவதற்கு யாழ். செயலகம் நடவடிக்கைஎடுத்து வருகிறது

மேற்படி தெரிவுசெய்யப்பட்ட 156 பேரதும் நன்நடத்தைகுறித்த அறிக்கையை சம்பந்தப்பட்ட ஒவ்வொரு பிரதேச செயலாளரிடமிருந்தும் யாழ். செயலகம் கோரியுள்ளது.

இவ்வாறு பெறப்படும் நன்நடத்தை குறித்த அறிக்கை யாழ். அரச அதிபரின் சிபார்சுடன் வடக்குகிழக்குமாகாண சபையின் பிரதம செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. இதைத்தொடர்ந்து மேற்படி நியமனங்கள் மிக விரைவில் வழங்கப்படும்என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பட்டதாரி பயிலுநர் நேர்முகப் பரீட்சை

பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர் இரண்டாம்தொகுதியினருக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 16ஆம், 17ஆம் திகதிகளில் யாழ். கல்வித் திணைக்களம் வலயம் 1இல் நடைபெறவுள்ளது இப்பரீட்சார்த்திகளின் பெயர்ப் பட்டியலை சாவகச்சேரி, யாழ்ப்பாணம்/நல்லூர், வேலணை/ஊர்காவற்றுறை கோட்டக் கல்வி அலுவலகங்களில் பார்வையிடலாம் எனவும் இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை அழைப்புக் கடிதங்கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும் யாழ் கல்வித் திணைக்களம் வலயம் 1இன் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

## போசாக்கற்றோர் குறித்து செயலகத்தில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள போசாக்கற்றவர்களுக்கும், மனோவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கும் புனர்வாழ்வளிப்பது குறித்த கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்றது

யாழ். அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உட்பட பல மருத்துவ அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## பேசாலைக் கடலில் 3 மீனவரைக் காணவில்லை

பேசாலை கடலுக்கு மீன் பிடிக்கச்சென்ற மூன்று மீனவர்கள் கடந்தவாரம் காணாமல்போயுள்ளனர். அவர்கள் சென்ற படகும் இயந்திரமும் துப்பாக்கிச் சூட்டினால் சேதமடைந்தநிலையில் கடலிலிருந்து மீட்கப்பட்டன

பேசாலையைச் சேர்ந்த யூட் கூஞ்ஞு, றொபேட் கூஞ்ஞு ஆகிய இரு சகோதரர்களும் துப்பாக்கிச் சூடுபட்டு சேதமடைந்த நிலையில் கடலிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

ஆனால் எங்கு தேடியும் இப்படகில் சென்ற மூன்று மீனவர்களையும் காணவில்லை இவர்களது நிலைகளை அறிய முடியாது பெற்றோர் தவித்துக் கொண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன-

## உணவு

கொழும்பில் தங்கியுள்ள திட்டப் பணிப்பாளரிடம் கோரப்பட்டுள்ளது.

இதே வேளை அடுத்து பருத்தித்துறை நோக்கி வருகின்ற 'றுகுணு' கப்பலில் இவ் உலர் உணவு முத்திரைகள் எடுத்து வரப்படும் என கொழும்பில் இருந்து திட்டப் பணிப்பாளர் அறிவித்துள்ளதாக புனர்வாழ்வுப் பகுதியினர் தெரிவித்துள்ளனர். (பா) (தி)

## பொதுத்

எம்- லொக்குபண்டார (ஊவா மாகாணம்), விஜே

பண நோட்டை மட்டும் கைப் பற்ற வேண்டும் என்பதுதான் அரசாங்க உத்தரவு ஆனால் சிலரின் முகவரிக்குரிய கடிதங் களை சந்தேகத்தின் பேரில் பிரிக்கும் கடற்படையினர் அவற்றினுள் உள்ள வேறு பொருள்களையும் கைப்பற்றி விடுகின்றனர் என்றார்.

(தி,பா)

## யாழ். மாநகரசபை சுகாதார வாரம் ஜூனில்

(நல்லூர்)

யாழ். மாநகரசபை சுகாதா ரப் பகுதியினர் சுகாதார வார நிகழ்ச்சிகளை ஜூன் 5ஆம் திகதி யாழ். நாவலர் மண்டபத்தில் ஆரம்பிக்க உள் ளர்கள். இதனைத் தொட ர்ந்து ஒரு கிழமைக்கு யாழ் மாநகரசபை சுகாதாரப் பகு தியினர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகள் மூலம் சுகாதார நடவடிக்கைகளை நடாத்த உள்ளார்கள்.

இந்நாட்களில் சுகாதாரக் கருத்தரங்குகள், சுகாதாரம் சம்பந்தமான கூத்துக்கள், தெருவோரக் கருத்தரங்குகள் பொது அறிவுப் போட்டிகள் ஆகியவைகளை நடாத்த உள் ளார்கள் எனவும் யாழ் மாந கர சுகாதாரப் பகுதி தெரி வித்துள்ளது. (19)

## நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயம் —1இற்கான கணித, விஞ்ஞான மூலவள நிலையம் நாளை காலை 10 00 மணிக்கு யாழ் முத் துத்தம்பி ம. வி. இல் அமைந் துள்ள கட்டடத்தில் ஆரம் பித்து வைக்கப்படவுள்ளது.

இத்தகவலை நிலையக் காப்பாளரும் வலயம் ஒன் றின் கல்விப் பணிப்பாளரு மான செல்வி தி. பெரியதம்பி தெரிவித்துள்ளார். (பா)

## பிளம்பயனில்

கப்பலில் கடிதப் பொதிகள் எவையும் ஏற்றிவரப்படுவ தில்லை யாழ் குடாநாட்டி லிருந்தே பொதிகள் ஏற்றிச் செல்லப்படுகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இவ் விடயம் பற்றி மேலதி காரிகளுடன் பேச தாம் அடு த்த வாரம் கொழும்பு புறப் படவுள்ளதாகவும் அவர் எமது செய்தியாளரிடம் தெரிவித் தார். [தி, பா]


### பிறந்த நாள் வாழ்த்துக்கள்

### செல்வன் ச. ஸ்ரீராஜ்குமார்

தனது 21 ஆவது பிறந்த நாளை 10- 5- 94 இல் வெகுவிமரிசையாக கொண்டாடுகிறார்.

வாழ்த்துபவர்கள்।

(8240) NDE - I - நண்பர்கள்

அச்சகத்திற்கு தேவையான பேப்பர் வகைக்கும் பாடசாலைக்கு உரிய கொப்பி வகைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

### ⊛ கண்ணன் கீதை ⊛

(மக்கள் வங்கி முன்பாக)

ஸ்டான்லி வீதி - யாழ்ப்பாணம்

குளோரின் பவுடர் மொத்தமாக பெற்றுக்கொள்ளலாம்.

(8242)

### யாழ் ஸ்ரீதரில்...

தினசரி மாலை 4, 6 மணி
சனி, ஞாயிறு காலை 10, 30
மாலை 4, 6 மணி

### காற்றுவெளி

(சி-9370)


கழகத்தை எதிர்த்து உதய சூரியன் விளையாட்டுக் கழக மும் முதலாம் பிரிவு ஆட்டத் தில் அராலி ஏ.எல். விளை யாட்டுக் கழகத்தை எதிர்த்து பாஷையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகமும் விளை யாடவுள்ளன. இப் போட்டி கள் பிற்பகல் மூன்று முப்பது மணியளவில் இணுவில் மகா ஜனாக் கல்லூரி மைதானத் தில் நடைபெறவுள்ளன:

## பாடசாலை கரபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வித்திணை க்களம் வலயம் இரண்டு நட த்தும் பாடசாலைகளுக்கு இடையிலான கரபந்தாட்ட போட்டியின் இறுதிப் போட் டிகள் நாளை புதன்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில் நடைபெறவு ள்ளன. இப் போட்டிகளில் 17 வயதுக்கு உட்பட்ட போட்டியில் யூனியன் கல் லூரி அணியைஎதிர்த்துஹாட் லிக் கல்லூரி அணியும், 19 வயதுக்கு உட்பட்ட போட்டி யில் புத்தூர் சோமாஸ் கந்தா அணியை எதிர்த்து அச்சு வேலி ம. வி அணியும் விளை யாடவுள்ளன.

## மதிய உணவு சீனியைப் பெறவும்

(யாழ்ப்பாணம்)

மாணவர் மதிய உணவு முத் திரைக்குவழங்கப்படும்சீனியை செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்க ளில் பெற்றுக் கொள்ளாத பல நோ. கூட்டுறவுசங்கங்கள் அவற்றை உடனடியாகப் பெற்று விநியோகிக்கும்படி யாழ் அரசாங்க செயலகத் தின் புனர்வாழ்வுப் பகுதி வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆகிய இரு சகோதரர்களும் அம்புறோஸ் என்ற மற்றொரு இளைஞனுமே காணாமல் போயுள்ளனர். கடந்த திங்கட் கிழமை அதிகாலை பேசாலை வடபகுதி கடல் பிராந்தியத் துக்கு இவர்கள் மீன்பிடித் தொழிலுக்கு சென்றுள்ளனர்: மூவரும் கரைக்குத் திரும் பாததால் சக மீனவர்கள் இவர்களைத் தேடியுள்ளனர். இவர்கள் எடுத்துச் சென்ற வலைகளும் படகும் அதனு டன் இணைக்கப்பட்டிருந்த அவுட்மோட்டர் இயந்திரமும்

### சகல

மாணவர்கள் உணவு முத்தி ரை பெற்று வருகின்றனர். ஜனாதிபதியின் பணிப்புரை செயலாக்கப்படுமானால் மேலும் 18 லட்சம் மாணவர் கள் உணவு முத்திரை பெறு வர் எனக் கூறப்படுகின்றது.

### தமிழ்

வகுதிக்கு ஒவ்வொன்றாக மூன்று நிகழ்ச்சிகள் வீதம் தெரிவு செய்வதோடு திறந்த போட்டி நிகழ்ச்சி ஒன்றும் ஊக்குவிப்பு நிகழ்ச்சி ஒன்றும் தெரிவு செய்யப்படலாம்.

பாடசாலைகள் கோட்டத் திற்கு விண்ணப்பிக்கும்போது விதிமுறைகளில் ஏற்படுத்தப் பட்ட இம் மாற்றங்களைக் கவனத்தில் கொள்ளுமாறு யாழ். மாவட்ட நிலையிலான தமிழ் மொழி கலைத் திறன் போட்டி அமைப்புக் குழுவின் தலைவர் இ சிவானந்தன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்) கேட்டுக் கொண்டுள்ளார்.

### மீனவர்

அமைச்சிற்கும் அரசாங்கத் திற்குமிடையே இழுபறி நிலை ஏற்பட்டுள்ளதனாலேயே நிவாரணக் கொடுப்பனவு தாமதமடைகிறது என அறி யப்பட்டது.

இந்த ஆண்டில் மார்ச், ஏப்பிரல் மாதங்களுக்கான மீனவர் நிவாரணம் வழங்கப் படவில்லை என்பது குறிப் பிடத்தக்கது. (தி, பா)

கின்றன-

## விமான நோட்டம்

சிறிலங்கா வான்படைக்கு சொந்தமான குண்டு வீச்சு விமானம் ஒன்று நேற்று முன் தினம் காலை 6. 25 மணிய ளவில் சுழிபுரம், பொன் னாலை, அராலிப்பகுதிகளின் வான் பரப்பில் தாழப்பறந்து மக்கள் குடியிருப்புக்களை நோட்டம் இட்டுச்சென்றது.

(ஊவா மாகாணம்), விஜ பாலா மெண்டிஸ் (மேற்கு மாகாணம்), மி. தயாரட்னா (கிழக்கு மாகாணம்), பெஸ் டஸ் பெரேரா (வடமேற்கு மாகாணம்) மற்றும் நந்தா மத்தியூ (சப்பரகமுவ மாகா ணம்) ஆகிய அமைச்சர்கள் இடம் பெறுகின்றனர். வட மாகாணத்துக்கும், தென்மா காணத்துக்குமான தேர்தல் ஒழுங்கமைப்பாளர்கள் எவ ரும் இன்னும் நியமிக்கப்பட வில்லை என்பது குறிப்பிடத் தக்கது-


### காணவில்லை

மட்டக்களப்பிலிருந்து இடம் பெயர்ந்து மிருசுவில் பெற்றார் இல்லத்தில் வசித்தவரான சுப்பையா மாரியாயியை 8-ம் திகதி தொடக்கம் காணவில்லை. இவர் கடைசியாக அணிந்திருந்த உடை குருத்துப் பச்சைநிற சாரியும், சிறிது பச்சை நிறமுடைய சலஞ் சர் சட்டையும் அணிந்திருந்தார். கறுப்பு நிறமுடைய இவர் சுமார் 4அடி 9 அங்குல உயரமும் 55 வயது டைய இவர் சிறிது நரை விழுந்த தலையும் கொண்டை முடிந்தும் காணப்படுவார். இவரைப்பற்றி அறிந்தவர் கள் மிருசுவிலில் உள்ள மட்டு அம்பாறை பெற்றார் இல்லத்திற்கு அறிவிக்கவும். [இ]

### மரண அறிவித்தல்

### இராசரத்தினம் சத்தியமூர்த்தி

(முன்னாள் நாஷனல் வங்கி லிகிதர்)

இராசரத்தினம் சத்தியமூர்த்தி காலமாகிவிட்டார் இவர் புத்தூரைச் சேர்ந்த இராசரத்தினம் தம்பதிக ளின் புதல்வரும், வல்வெட்டியைச் சேர்ந்த மயில்வா கனம் தம்பதியினரின் மருமகனும், இராசராணியின் அன்புக் கணவரும், தயானந்தி (கனடா), உபேந்திரன், (இங்கிலாந்து), சுதர்சன், நித்தியானந்தி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், கண்ணனின் மாமனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் வல்வெட்டியில் 94-5-10-ந் திகதி நண்பகல் 11-00 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பழைய பொலிஸ் நிலைய வீதி, சுதர்சன்
வல்வெட்டி. வல்வெட்டித்துறை. (8243)

## வெகுவிரைவில்... மண்ணுக்காக

(இ)



இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது'